| 05 | முயற்சியாண்மைக்கல்வி<br>அலகு ரீதியான மீட்டல் செயலட்டை விடைகள்<br>தரம் 10 |
|---|---|

## வணிகச் சூழல் –விடைகள்

(1)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | ② | 6. | ③ | 11. | ② |
| 2. | ③ | 7. | ① | 12. | ① |
| 3. | ② | 8. | ④ | 13. | ③ |
| 4. | ③ | 9. | ④ | 14. | ③ |
| 5. | ④ | 10. | ④ | 15. | ② |

(2)

1. வணிக செயற்பாடுகளின் போது நேரடியாகவும், மறைமுகமாகவும் தாக்கத்தை ஏற்படுத்துகின்ற காரணிகள் மற்றும் சக்திகள் அனைத்தும் வணிக சூழல் எனப்படும்.

2.

- வணிகத்தில் காணப்படும் பலம் மற்றும் பலவீனங்களை கண்டு கொள்ள முடிதல்.
- வணிகச் சூழலில் காணப்படுகின்ற வாய்ப்புக்களை கண்டு கொள்ள முடிதல்
- வணிகம் எதிர் கொள்கின்ற சவால்களை இனம் காண முடிதல்
- வணிக சூழலுக்கு ஏற்படுகின்ற மாற்றங்களுக்கு ஏற்ப உற்பத்தி மற்றும் விற்பனை நடவடிக்கைகளை நடாத்துவதற்கு.

3. **புராதான வணிக சூழல்**

- அக்கால மக்களின் பெரும்பாலான அடிப்படைத் தேவைகள் குறைவானதாக காணப்பட்டன.
- தேவைகளும், விருப்பங்களும் எளிமையாக காணப்பட்டன.
- வணிகர்கள் பலமுடையவர்களாக இருந்தனர்.

COMMERCE & BUSINESS STUDIES BRANCH

**நவீன வணிக சூழல்**

- மக்களின் அடிப்படைத் தேவைகள் மிகவும் அதிகமாக காணப்படுகின்றன.
- தேவைகளும், விருப்பங்களும் விரிவடைந்து காணப்படுகின்றன.
- நுகர்வோர் பலமுடையவர்களாக உள்ளனர்.

4. அகச்சூழல் - உரிமையாளர், முகாமையாளர், ஊழியர்

   புறச்சூழல் - மக்கள் சூழல், பொருளாதார சூழல்

5. வணிக நடவடிக்கையில் விருப்பமும் மற்றும் நம்பிக்கையும் கொண்ட ஊழியர்கள் வணிகத்திற்கு பலமாகும். ஊழியர்களின் அறிவு மற்றும் பயிற்சி வணிக நடவடிக்கைகளை உயர்ந்த மட்டத்தில் நடாத்திச் செல்ல உதவும்.

6.

   I. வேலையின்மை

   II. அதிகரிக்கும் வட்டிவீதம்

   III. பணவீக்கம்

   IV. அந்நியச்செலாவணி உயர்வு

7. முதல்நிலை - விவசாயம், மீன்பிடி, அகழ்வும் சுரங்கத் தொழிலும்

   இரண்டாம்நிலை -உற்பத்தி, நிர்மாணம்

   மூன்றாம்நிலை -வங்கி, காப்புறுதி, போக்குவரத்து, தொடர்பாடல்

8.

   I. புதிய தொழில்நுட்பம் மற்றும் உபகரணங்களின் பயன்பாடு

   II. உலகமயமாக்கல்

   III. சூழலுக்கு இசைவான உற்பத்திகள் அறிமுகம்

   IV. ஆரோக்கியமும் பாதுகாப்பானதுமான உணவு உற்பத்தி

   V. சேதன பசளையிடப்பட்ட மரக்கறிகள் மற்றும் பழங்கள்

COMMERCE & BUSINESS STUDIES BRANCH

9.

I. புதிய வருமான மூலங்களை கண்டு கொள்வதற்கான திறனை அதிகரித்து கொள்வதற்கு.

II. வெற்றிகரமான வணிக சந்தர்ப்பங்களை அடைந்து கொள்வதற்கு.

III. சூழல் பிரச்சனைகளைக் குறைத்து கொள்வதற்கு.

IV. தனித்துவமான வளங்களை பாதுகாக்கவும் எதிர்கால சந்ததியினர்க்கும் சேமிக்கவும்.

V. போட்டிச் சந்தைகளுக்கு வெற்றிகரமாக முகம் கொடுப்பதற்கு

10. இயற்கை வளம் - நீர், அருவி

கனிய வளம் - இரத்தினக் கற்கள், காரீயம், பளிங்குக்கல்

கலாச்சார வளம் - அனுராதபுரம், பொலன்னறுவை

COMMERCE & BUSINESS STUDIES BRANCH